**இரத்தினபுரி மாநகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 ஆந் திகதி நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காசுப்பாய்ச்சல் கூற்று

(ii) பாதீடப்பட்ட தொகையையும் உள்ளபடியான தொகையையும் ஒப்பீடு செய்யும் கூற்று அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதிடப்பட்ட தொகையை தனியான நிரலாகக் காண்பித்தல்.

(iii) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

(iv) தேறிய சொத்து/ உரிமை மூலதன மாற்றக் கூற்று

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டிற்குரிய ஆகக் குறைந்த வழங்கல் தொகை ரூபா 85,153,396 ஆக இருந்ததுடன் ரூபா 83,944,496 தொகை மாத்திரம் வருமானமாகக் காண்பிக்கப்பட்டு ரூபா 1,321,400 தொகையான வேறுபாடு நானாவித வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளிலிருந்து ஆகக் குறைந்த வழங்கல் பணமாக பெறப்பட்ட ரூபா 100,706,846 தொகை உரிய ஆண்டுகளின் போது வருமானத்திற்கு எடுக்கப்படாது நானாவித வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது முன்கொண்டுவரப்பட்ட நானாவித வைப்பு மீதி வைப்புப் பதிவேட்டின் மீதியை விட ரூபா 82,665,276 தொகை குறைவாகக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ஒக்தோபர் மாதம் வரை இனங்காணப்பட்ட விருந்தினர் விடுதி வாடகை ரூபா 1,147,387 தொகை மற்றும் நிலுவை வருமானம் இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய பழைய பஸ் நிலைய கடை வாடகை வருமானம் ரூபா 1,021,406 ஆக இருந்த போதிலும் ஆண்டின் பெறுவனவுகள் ரூபா 936,289 தொகை மாத்திரம் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 85,117 தொகையான வருமானம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மூலம் மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கில் ஒட்டுமொத்த விளைவின் மூலம் ரூபா 23,582,654 தொகையான மிகையொன்று காணப்பட்ட போதிலும், திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 16,251,538 தொகை மாத்திரமே சீராக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் கிடைக்கவேண்டிய ஆதனக் கடன் வட்டி வருமானம் ரூபா 86,838 ஆக இருந்த போதிலும் ரூபா 1,290,152 தொகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 415,600 மற்றும் ஆண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய மீதி ரூபா 802,415 தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டு அந்த நிறுவனங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் முறைமையொன்று காணப்படாதிருந்ததுடன் வருமானம் ரூபா 1,800,396 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 252,000 தொகை ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 20,200,306 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் ரூபா 11,098,522 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 21,192,393 ஆக இருந்த போதிலும், ஆதனவரி பேரேட்டுக் கணக்கின் படி அந்த மீதி ரூபா 21,335,707 ஆனமையால் ஆதனவரி கடன்பட்டோர் பெறுமதி ரூபா 143,314 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கின் படி ஆதனவரி வருமானம் ரூபா 34,095,797 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆதனவரிப் பிரிவின் உள்ளபடியான வருமானம் ரூபா 26,000,125 ஆனமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 8,095,672 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய ஆண்டுகளிலிருந்து வருமானச் செலவினக் கணக்கில் சீராக்கப்படாத திட்டமிடல் குழுவின் செயன்முறைக் கட்டணம், அனுமதியற்ற சேவைக் கட்டண வருமானம் மற்றும் செயன்முறைக் கட்டணக் கணக்கின் செலவினம் மீளாய்வாண்டிற்குரியதாகப் பெறப்பட்ட முறையே ரூபா 975,150 தொகையும் ரூபா 133,000 தொகையும் வருமானத்திற்குக் கொண்டுவரப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய செயன்முறைக் கட்டணக் கணக்கின் செலவினம் ரூபா 191,000 தொகையும் செலவினத்தில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. அந்த கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மீதி முறையே ரூபா 3,497,529 தொகையும்

ரூபா 518,645 தொகையும் மீளச் செலுத்த வேண்டிய வைப்புப் பணமாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் கிடைத்த பொதுச் சந்தை நிர்மாணிக்கும் கடன் தொகை மீதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 40,361,321 ஆக இருந்த போதிலும் கணக்கின் பிரகாரம் அந்த மீதி ரூபா 28,002,506 ஆனமையால் மீதி ரூபா 12,358,815 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக ஆண்டின் போது செலுத்தப்பட்ட கடன்தொகையின் பகுதிப் பணம் ரூபா 5,845,413 தொகை மற்றும் வட்டித்தொகை ரூபா 2,816,843 தொகையும், மீளாய்வாண்டிற்காக மேலும் செலுத்தவேண்டிய வட்டி ரூபா 908,130 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கா) நுழைவு வீதி மற்றும் புறச் செயற்பாட்டுக் கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் மீளாய்வாண்டிற்குரியதாகப் பெறப்பட்ட ரூபா 3,658,113 தொகையான 40 சதவீத வழங்கல் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கி) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் செயற்திட்ட இலக்கம் 1632 SRI(SF) இன் கீழ் இரத்தினபுரி மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 12,656,450 தொகையான கடன் தொகைக்குரியதாக மீள்வாண்டில் செலுத்த வேண்டிய ரூபா 7,655,794 தொகையான வட்டிப் பணம் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கீ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட கடன் ரூபா 11,046,045 ஆக இருந்ததுடன் மீள அறவிடல் ரூபா 8,845,730 ஆக இருந்தது. ஊழியர் கடன் கட்டுப்பாட்டுப் பேரேட்டுக் கணக்கின் படி செலுத்தப்பட்ட ரூபா 12,458,021 தொகையும், அறவிடல் ரூபா 10,280,711 தொகையும் ஆக செலுத்தப்பட்ட கடன் ரூபா 1,411,976 தொகை மற்றும் அறவிடல்களில் ரூபா 1,434,981 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(கு) அபிவிருத்திக் கணக்கிற்குரிய மீளாய்வாண்டில் ரூபா 5,232,728 தொகையான வருமானம், ரூபா 7,349,958 தொகையாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 2,117,229 தொகை வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கூ) ஏனைய வருமானமாக ரூபா 12,498,355 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய ஏனைய வருமானம் ரூபா 15,401,722 ஆனமையால் ரூபா 2,903,367 தொகையான வருமானம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கெ) செலவினப் பேரேட்டையும் கணக்கையும் ஒப்பீடு செய்த போது 64 செலவின விடயங்களில் ரூபா 25,108,171 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(கே) செலவினப் பேரேட்டில் உள்ள 05 செலவின விடயங்களுக்குரிய ரூபா 10,284,390 தொகையான செலவினம் ஆண்டின் செலவினமாகக் கொண்டுவரப்படாமையினால் அதன் பெறுமதியில் மீளாய்வாண்டின் செலவினம் குறைத்துக் காண்பிக்கப்பட்டது.

(கை) 08 செலவின விடயங்களுக்குரிய ரூபா 553,027 தொகையான செலவினம் செலவினப் பேரேட்டில் பதியப்படாதிருந்த போதிலும் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கொ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணம் தொடர்பாக கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கீடு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 15 சொத்துக் கணக்கு விடயங்களுக்கும் 08 பொறுப்புக் கணக்கு விடயங்களுக்கும் உரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரமும் பயன்பாட்டுப் பதிவேடுகளின் பிரகாரமும் முறையே ரூபா 14,013,241 மற்றும் ரூபா 85,516,786 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) இயந்திர உபகரணப் பதிவேட்டிற்கும் கணக்கிற்கும் இடையே ரூபா 5,456,300 தொகை, மோட்டார் வாகனமும் வண்டியும் பதிவேட்டிற்கும் கணக்கிற்கும் இடையே ரூபா 60,074,217 தொகை மற்றும் தளபாடமும் பொருத்திகளும் பதிவேட்டிற்கும் கணக்கிற்கும் இடையே ரூபா 857,923 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(இ) பொழிப்பு வருமானப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ஆரம்ப நிலுவை மீதி மற்றும் முற்பெறுவனவுகள், கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய வருமானப் பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது 17 வருமானத் தலைப்புக்களுக்குரிய நிலுவை மீதி மற்றும் முற்பெறுவனவுகள் முறையே ரூபா 12,904,823 தொகை மற்றும் ரூபா 69,893 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 113,993,254 கூட்டுப்பெறுமதியான பெறவேண்டிய கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 8,406,364 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் 03 பொறுப்பு மீதிகளுக்காக அந்த கணக்கு மீதிகள் இணக்கம் செய்யப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் மற்றும் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 300,000 தொகையான எரிபொருளுக்கான வைப்பு தொடர்பான தகவல்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்குகளின் பிரகாரம் ரூபா 67,368,392 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கடன்கொடுத்தோர் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பிரிவு | பொதுச் சந்தையின் முன்பக்கத்தில் 23 கடைகளை வாடகைக்கு வழங்கும் போது பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2010 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க பிரதம செயலாளரின் சுற்றறிக்கை | தொடர்புடைய சுற்றறிக்கைக்கு முரணாக நிறுவனத்தின் 116 வெற்றிடப் பதவிகள் குறிப்பாக இனங்காணப்பட்ட முடியுமாக இருந்த போதும், அந்தப் பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படாது சேவை உடன்படிக்கையின் அடிப்படையில் 242 ஊழியர்கள், அமைய, நாட்கூலி, ஒப்பந்த அடிப்படையில் 77 ஊழியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (இ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை -1992 | |
| (i) | நிதிப்பிரமாணம் 395 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல் நீண்ட காலத்தாமதத்துடன் காணப்பட்டது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 811,968 தொகையான 89 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 579,358 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,168,213 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பற்றாக்குறை முன்னயை ஆண்டுடன் ஒப்பிடும் போது 103 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. இதற்கு பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் குறைந்தமையும் செலவினம் அதிகரித்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| ------------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 24,475 | 35,481 | 21,192 |
| வாடகை | 69,829 | 40,979 | 8,362 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,317 | 1,930 | - |
| ஏனைய வருமானம் | 206,951 | 160,175 | - |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

-----------------------------------------------------------

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானங்களுடன் ஒப்பீடு செய்த போது வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைக்கான கட்டணம் மற்றும் பிடியானைக் கட்டணம் மற்றும் தண்டப் பணங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 41, 55, 47 சதவீத மற்றும் 77 சதவீதக் குறைவைக் காண்பித்தது.

**2.3.3 கடை வாடகை**

---------------------------

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 123 கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 1,920,536 தொகை அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) பொதுச் சந்தையின் முன்பக்க கடைகளை வாடகைக்குப் பெற்ற 07 வாடகையாளர்களினால் உரிய வழங்கல் பணம் 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 30 ஆந் திகதி வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர பிதாவின் 2013 சனவரி 01 ஆந் திகதிய பொதுச் சந்தைக் கடைகளை வாடகைக்கு வழங்கும் கடிதத்தின் பிரகாரம் ரூபா 250,000 வழங்கல் தொகையில் 50 சதவீதம் செலுத்தி மிகுதியை ஒரு வருட காலத்தில் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 135 கடைக்கூறுகளிலிருந்து அறவிடவேண்டிய வழங்கல் பணம் ரூபா 11,555,8000 தொகையாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அந்தக் கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு சபை முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) பொதுச் சந்தையின் 23 முன்பக்க கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல்களின் பிரகாரம் ரூபா 20,000 மாதாந்த வாடகை அடிப்படையில் கடைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்த கேள்விதாரர்களுக்கு கடைகளை வழங்காமையின் காரணமாக 14 வாடகையாளர்களிடமிருந்து சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 8,400,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் 04 சந்தர்ப்பங்களில் கேள்வி கோரப்பட்ட போதிலும் கூறுவிலை சமர்ப்பிக்காத 04 கடைகளை வாடகைக்குப் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்த 04 வாடகையாளர்களுக்காக முறையான நடைமுறைகளின்றி 2013 மே 29 மற்றும் 2013 யூலை 10 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் கடைகள் வழங்கப்பட்டிருந்தது.

### 2.3.4 காணி வாடகை

அரசாங்க மதிப்பீட்டாளரிடமிருந்து 2011 மார்ச் 14 ஆந் திகதி பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் ரூபா 26 இலட்சம் தொகையில் எவ்வித கேள்வி கோரலுமின்றி அல்லது வாடகை உடன்படிக்கையின்றி சபைக்குச் சொந்தமான புளுங்குபிட்டி பொது மலசலகூடத்திற்கு அருகிலுள்ள காணி ஒரு வருட காலத்திற்காக நபரொருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் பகிரங்க கேள்வி கோரப்பட்டதாக கோவை தயாரித்து மீண்டும் 81 B, ஹொலீபிட்டி, தொடம்பே என்ற முகவரி குறிப்பிடப்பட மேற்கூறப்பட்ட முதலாவது வாடகையாளரின் மனைவிக்கு மேற்கூறப்பட மதிப்பீட்டின் அடிப்படையில் 2012 திசெம்பர் 19 ஆந் திகதி ரூபா 2,611,500 தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இணக்கச் சான்றிதழ் பெறப்படாமல் இந்தக் காணியில் மூன்று மாடிக் கட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக அத்திவாரம் போடப்பட்டிருந்தமை 2013 ஒக்தோபர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் 2013 மார்ச் முதல் திசெம்பர் மாதம் வரை ரூபா 11,098,522 ஆக இனங்காணப்பட்டிருந்தும் வருமானத்தை சபைக்கு அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீதிமன்றத் தண்டபண வருமானம் 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 342,317 தொகை மற்றும் 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 415,600 ஆக இனங்காணப்பட்டு 2014 சனவரி 30 ஆந் திகதி சபைக்கு அறவிடப்பட்டிருந்தும் கணக்குகளின் மூலம் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 ஏனைய வருமானம்

மாநகர சபைக்குச் சொந்தமான லக்ஸ்மி சினிமா மண்டபத்திற்காக கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 551,000 தொகையினை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிராததுடன் சினிமா மண்டமும் காடுவளர்ந்து மூடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்காக சீமெந்து கொள்வனவு செய்யும் போது வழங்குனர்களின் பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்படாத நிறுவனமொன்றின் மூலம் ரூபா 2,316,3000 தொகயான சீமெந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபை 07 சந்தர்ப்பங்களில் ரூபா 1,432,061 முதல் ரூபா 6,059,060 வரை மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட்டமையின் காரணமாக 2013 திசெம்பர் 09 முதல் திசெம்பர் 30 வரை காசேட்டில் தொடர்ச்சியாக மறைமீதி காணப்பட்டது.

(இ) 72808049 ஆம் இலக்க இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் 2012 யூன் 29 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 64,517 தெகையான மீதி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் செயற்பாடின்றிக் காணப்பட்டது.

## 3.2 வெளிநாட்டுப் பிரயாணம்

(அ) வெளிநாட்டு அமைப்புக்கள் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக செலவாகின்ற சகல செலவினங்களையும் வசதிகளையும் செய்யவேண்டிய போதிலும் 2013 பெப்ரவரி 26 ஆந் திகி முதல் 2013 மார்ச் 03 ஆந் திகதி வரை தாய்லாந்து சுற்றுலாவிற்காக 12 உறுப்பினர்களுக்கு ரூபா 90,000 வீதம் சபை நிதியத்திலிருந்து ரூபா 1,080,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நி.தி.அ 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரினதும் திறைசேரிச் செயலாளரினதும் சுற்றறிக்கையின் 2(i) ஆம் பிரிவின் படி வெளிநாட்டு பிரயாணப் படி மற்றும் அது தொடர்பான செலவினங்களைப் பெற்றுக்கொள்வதற்காக முறையான பிரகாரம் கடமை விடுமுறை அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், எவ்வித விடுமுறை அங்கீகரித்தலுமின்றி தாய்லாந்தில் நடைபெற்ற பயிற்சி செயலமர்விற்காக பங்குபற்றிய 12 உறுப்பினர்களுக்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 1,358,100 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2013 ஒக்தோபர் 20 ஆந் திகதி முதல் ஒக்தோபர் 25 ஆந் திகதி வரை இந்தோனோசியாவில் நடைபெற்ற உள்ளூராட்சி முறைமை தொடர்பான கல்விச் சுற்றுலாவிற்காக சபை நிதியத்திலிருந்து செலவினங்களைச் செய்வதற்கு பிரதம அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அதற்காக ஒரு உறுப்பினருக்கு ரூபா 173,265 சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்து. மேலும் 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வரையிலும் பயிற்சி முடிவடைந்து 10 மாதங்கள் கடந்திருந்த போதிலும் இந்தோனேசிய உள்ளூராட்சி முறைமை தொடர்பாக பெறப்பட்ட அறிவை உள்நாட்டு ரீதியில் பயன்படுத்திக் கொள்ளும் முறை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# 4. கணக்களிப் பொறுப்பு நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 29 செலவின விடயங்களுக்குரிய ரூபா 3,382,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும் எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 20 செலவின விடயங்களுக்குரிய ரூபா 6,846,000 தொகையான மொத்த நிதி ஏற்பாடும் எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்படது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) 29 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 17,805,838 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக உரிய அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

**4.2 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 33 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 348,606,901 ஆகும்.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிதிக் கட்டுப்பாடு